Source: *Tamil Murasu*, p2
Date: 10 June 2022

# தேசிய பல்கலைக்கழகம் ஆசியாவில் தலைசிறந்தது

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் ஆசியாவின் தலைசிறந்த பல்கலைக்கழகம் என்று பெயர் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதேவேளையில், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் தரநிலையில் கீழே இறங்கி இருக்கிறது. 'கியூஎஸ்' என்ற அமைப்பின் வருடாந்திர உயர் கல்வி நிலையங்களின் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது.

உலகளவில் 11வது தலைசிறந்த பல்கலைக்கழகமாக தேசிய பல்கலைக்கழகம் வரிசைப்படுத்தப்பட்டு உள்ளது. சென்ற ஆண்டில் 12வது இடத்தில் இருந்த நன்யாங் பல்கலைக்கழகம் இப்போது 19வது இடத்திற்கு இறங்கியது.

பிரிட்டனை தளமாகக் கொண்ட அந்த உயர் கல்வி நிலையப் பகுப்பாய்வு நிறுவனப் பட்டியலில் கடந்த ஐந்து ஆண்டுகளாக ஆசியாவின் தலைசிறந்த பல்கலைக் கழகங்களில் ஒன்றாக தேசிய பல்கலைக்கழகம் இடம்பெற்று வருகிறது. பெனிசில்வேனியா, எடின்பர்க், பிரின்ஸ்டன், யேல் போன்ற பல்கலைக்கழகங்களைவிட சிறந்த நிலையில் தேசிய பல்கலைக்கழகம் திகழ்கிறது.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.